விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 வைகாசி 20 [illegible] 27 இதழ் 15
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 02-06-1989

University of Sri Lanka
RECEIVED
1989-6-8
Periodicals Division
Library

## சிரேஷ்ட பொலிஸ் அதிபர் சுட்டுக்கொலை!

### மாகாணசபை உறுப்பினரும் பலி

(கொழும்பு)

பொலிஸ் விசேட புலன் விசாரணைப் பிரிவின் தலைவரான சிரேஷ்டபொலிஸ் அதிபர் திரு. பெனட் பெரேரா நேற்றுக்காலை 6 இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திரு. பெனட் பெரேரா தமது அலுவலகத்திற்குக் காரில் சென்றுகொண்டிருந்தபோது மறைந்திருந்த துப்பாக்கி நபர்களால் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

திரு. பெனட் பெரேராவுடன் அவரது துணைவியாரும் சென்றிருந்தார் என்றும் ஆனாலும் மனைவி காயமெதுவுமின்றித் தப்பினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. கார்ச்சாரதியும் பலியானார்.

காலி வீதியில்இரத்மலானைக்கும் தெஹிவளைக்குமிடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதுஇவ்வாறிருக்க மாகாணசபைஉறுப்பினரும், கொழும்பு மாநகர முன்னாள் உறுப்பின

(8ம் பக்கம் பார்க்க)

# அமைதிப்படையை இந்தியா அடுத்த மாதம் வாபஸ் பெற வேண்டும்!

## ஜனாதிபதி பிரேமா கோரிக்கை

### சில தினங்களில் ராஜீவ்-பிரேமா பேச்சு

(கொழும்பு)

**"இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதி காக்கும் படையினர் இவ்வாண்டு ஜூலை மாத இறுதிக்குள் வாபஸ்பெறப்பட வேண்டும்'' என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இந்தியாவைக் கேட்டுள்ளார்.**

'''சார்க்' நாடுகளைச்சேர்ந்த தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சி மகாநாடு இவ்வாண்டு இலங்கையில் நடைபெற இருக்கிறது. வெளிநாட்டுப் படைகளை இங்கு வைத்துக்கொண்டு அந்த உச்சி மகாநாட்டை உரிய கௌரவத்துடன் நடத்த முடியாது. எனவே நெருக்கடியான கால கட்டத்தில் அமைதிப்படையினரை இங்கு அனுப்பி இலங்கைக்கு உதவியதுபோலவே அடுத்தமாத இறுதிக்குள் அமைதிப் படையினர் சகலரையும் இந்தியா வாபஸ் பெற்று எமக்கு உதவ வேண்டும்'' என்றுஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற சமய வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. பிரேமதாசா மேற்கண்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் நேற்று

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் பலியான ஒருவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலே இந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் 'ஷெல்'

### வீடுகள் சேதம், ஒருவர் பலி!

(வடமராட்சி)

பருத்தித்துறையில் 'நேற்று இரு புதிய பஸ்கள் கொளுத்தப்பட்டன. ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பொது மக்களின் வீடுகள் 'ஷெல்' தாக்குதலினால் சேதமடைந்தன. ஒரு சிறுவன் படுகாயமடைந்தான்.

நேற்றுக்காலை பருத்தித்துறை கல்லூரி வீதியருகே இடம்பெற்ற மோதலின் எதிரொலியாக 'ஷெல்' தாக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பஸ் நிலையப் பகுதியில் நடைபாதை வியாபாரம் தடைசெய்யப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையச் சுற்றுடலில் உள்ள நடைபாதை வியாபாரிகளினது வியாபாரக் கடைகளுக்கு இன்று முதல் தடைபோடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நடைபாதை வியாபாரிகளினால் போக்குவரத்து, மற்றும் சுகாதாரம் என்பன பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்த புகாரைத் தொடர்ந்தே இந்த நடைபாதை வியாபார நிலையங்களை அகற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

அதே நேரத்தில் நடைபாதை வியாபாரிகளுக்கு நகரத்தில் பஸ் நிலையத்துக்கு அண்மையில் புதிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தனியார் மினிபஸ்களும் யாழ். பஸ் நிலையச் சுற்றுடலில் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனத் தெரியவருகிறது.

எனினும் மினிபஸ்கள்தரிப்பதற்கு ஆரியகுளம் பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மினிபஸ்கள் அங்கிருந்து யாழ். பஸ் நிலையம் வந்து பிரயாணிகளை ஏற்றிச் செல்லமுடியும் என்றும் இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டு வினையாகியது: ஆஸ்பத்திரியில் 2 சகோதரர்

(யாழ்ப்பாணம்)

வீதியில் கிடந்த வெடிக்கும் பொருள் ஒன்றை எடுத்து விளையாடிய இரு சகோதரர்கள் படு காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று மாலை காங்கேசன் துறை-[illegible] யில் கிடந்த வெடிக்கும் பொருள் ஒன்றை எடுத்துச் சென்று விளையாடிய கார்த்திகேசு சிவகுமார் (வயது 4), கார்த்திகேசு சந்திரகுமார் [வயது 10] ஆகிய இரு சிறுவர்களுமே படுகாயத்துக்குள்ளாகினர்.

முதலில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் [illegible] இந்தச் சிறுவர்களில் மூத்த [illegible] இருப்பதாகக் கூறப்பட்டது. (கு)

## நாவாந்துறை, திருநெல்வேலியில் மூன்று சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று சடலங்கள் காணப்பட்டன.

மூன்று சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இறந்த மூவரின் சடலங்களும் யாழ் ஆஸ்பத்திரியிலுள்ள பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாவாந்துறைப் பகுதியில் காணப்பட்ட சடலம் தொண்டமனாறைச் சேர்ந்த விஜய

(8-ம் பக்கம் பார்க்க)

### மற்றுமொரு சடலம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஆத்திசூடி வீதியில் துப்பாக்கிச் சூட்டுக்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் செயற்படாமல் இன்றுடன் பத்து நாட்களாகின்றன.

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள், ஏனைய பல்கலைக்கழக ஊழியர்களுடன் இணைந்து சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதைத்தொடர்ந்து பல்கலைக் கழகம்இயங்காததுதெரிந்தே

(8-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு உத்தியோத்தர் பதவி: வெற்றிடம்ஐந்து: விண்ணப்பித்தோர் எண்ணிக்கை ஐநூறு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான முதலாவது நேர்முகப்பரீட்சை நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில்

((8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு மாகாண புனரமைப்பு: வெளிநாடுகள் தாராள உதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனரமைப்புக்கென ஏழு கோடி டாலர் உதவியாகக் கிடைக்கவுள்ளது.

ஆஸ்திரேலியா, டென்மார்க், கனடா ஆகிய நாடுகளும் ஐரோப்பிய சமூகமும் இந்த உதவிகளை வழங்கவுள்ளன.

கனேடிய உதவி புகையிரதச் சேவைக்கும், பல்கலைக் கழகத்தை அபிவிருத்திசெய்வதற்கும், டென்மார்க் உதவி தொலைத்தொடர்பு அபிவிருத்

(8-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் ஹர்த்தால்: தொடர் குண்டுச் சத்தங்கள்

(வடமராட்சி)

வடமராட்சியின் சில பகுதிகளில் நேற்று ஹர்த்தால் நடைபெற்றது.

அண்மையில் மரணமான ஒருவரின் நினைவாகவே இந்த ஹர்த்தால் நடைபெற்றது.

பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள் இயங்கவில்லை, கடைகள், சந்தைகள், வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. தனியார் பஸ்கள், இ. போ. ச. பஸ்கள் யாவும் நண்பகலுடன் தமது சேவைகளை நிறுத்தியுள்ளன.

பருத்தித்துறை, இன்பருட்டி, வியாபாரிமூலை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலேயே ஹர்த்தால் நடை

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### இலவசம்

மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம் நாவல்களில் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன்களை கொடுத்து இலவச நாவலை பெறுங்கள். ராஜன் புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம். கவிதா ஸ்டோர்ஸ் வவுனியா.
(சி. 2783)

### விற்பனைக்கு

Deepak PL -4 லேத் மெசின் புதியது விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி. 2784)

10. போத்தல் தொடக்கம்- 16. போத்தல் வரை, கறக்கும் கறவைப் பசுக்கள் பட்டியாகவோ ஒவ்வொன்றாகவோ வாங்கலாம். முறைப்படி. தடுப்பூசிகள் ஏற்றப்பட்டவை. 5 லோட் மாட்டெருவும் விற்பனைக்கு உண்டு. M. சோதிராசா, C/o, யூனியன் பேக்கறி, நுணுவில் கிழக்கு சாவகச்சேரி.
(சி. 2787)

சாவகச்சேரியில் கண்டி ரோட் ஆஸ்பத்திரிக்கு முன்பாக சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் கூடிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- பொன்னுத்துரை இராஜேந்திரம், பருத்தித்துறை வீதி கொடிகாமம், அல்லது இரத்தினம் சந்திரகுமார் மாக்கற் லேன் கொடிகாமம்.
(சி. 2782)

# கடத்தப்பட்ட பொருட்களுடன் யாழ் வாசி கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட புடவைகளை வைத்திருந்தாரென கொழும்புபுறக் கோட்டை பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

900 இந்தியன் வொயில் சீலைகளும், 200 இந்தியன் சாரங்களும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் இவற்றின் பெறுமதி ஒரு லட்சத்து இருபதாயிரமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுந்த ஆதாரங்களை காட்டத் தவறியதையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாகவும் சுங்கத் திணைக்களம் இதற்குத்தண்டனை கட்டணமாக மூன்றுலட்சத்து எழுபத்தையாயிரம் செலுத்துமாறும் உத்தரவிட்டனர். பணத்தை செலுத்தத் தவறியமையால் தற்போது கொழும்பு பொலிசாரிடம் இவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# தென்பகுதி காட்டிலிருந்து 5 சடலங்கள் மீட்கப்பட்டன!

(கொழும்பு)

தென் பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் காடொன்றினுள் இருந்து கருகிய நிலையில் ஐந்து சடலங்களை மீட்டுள்ளனர். இச்சம்பவம் திக்கெல காட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பன்னெல பகுதியில் தேடுதலில் ஈடுபட்டிருந்த போதே பொலிஸார் எதிர்பாராத விதமாக இந்த ஐந்து சடலங்களையும் மீட்டுள்ளனராம் கடந்த இருதினங்களுக்கிடையில் இந்த கொலைச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

இதேவேளை கலனுவ என்னுமிடத்தில் அடையாளம் தெரியாத இருவரும், தங்காலை, ஹேராமாகம பகுதியில் மூவரும் கக்மனவில் ஒருவரும் பண்டாரகம பகுதியில் ஐ. தே. கட்சி கிளை தலைவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். குளியாப்பிட்டிப் பகுதியிலும் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை தென்பகுதியில் கடந்த சில தினங்களில் பெருமளவிலான ஆயுதங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## டிசம்பரில் இந்திய தேர்தல்

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்ற பொதுத்தேர்தல் இவ்வாண்டு டிசம்பர் பிற்பகுதியில் நடைபெறுமென இந்திரா காங்கிரஸ் கட்சி பொதுச்செயலர் திரு. யு. என். காட்கில் தெரிவித்துள்ளார்.

இதற்கான சகல நடவடிக்கைகளிலும் தேர்தல்பிரசாரங்களிலும் தற்போது அனைத்து கட்சிகளும் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

### தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம், வெண்கலம் உயர் விலைக்கு எடுக்கப்படும். பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(2752)

## பீடாதிபதி சுட்டுக்கொலை

(கொழும்பு)

அக்குரல பௌத்த விகார பீடாதிபதி ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முகமூடியணிந்து வந்த எட்டுப்பேரடங்கிய இந்தக் குழு விகார பீடாதிபதி வண. ஸ்ரீ எஸ். எ. தர்மரத்ன தேரோவை சுட்டுக்கொலை செய்துள்ளது.

## அதிபர் பிரிவு அதிகரிப்பு

[கொழும்புத்துறை]

வல். வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் புதிதாக மேலும் 21 கிராம சேவை அலுவலர் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

முன்னர் இவ்உதவி அரச அதிபர் பிரிவில் 24 கிராம சேவை அலுவலர் பிரிவுகள் இருந்தன. தற்போது45கிராம சேவை அலுவவர் பிரிவுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

உ
கணபதிதுணை

## திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான சுக்கில வருடம் வைகாசி மாதம் 21-ம் நாள் (1989-06-04) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-04 முதல் 12-40 வரை உள்ள மிருகசீரிட நட்சத்திரமும் கடகலக்கின சுபமுகூர்த்தத்தில்

அளவெட்டியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. செ. புண்ணியமூர்த்தி திருமதி சாவித்திரிபுண்ணியமூர்த்தி தம்பதிகளின் கனிஷ்டபுதல்வன் திருநிறைச் செல்வன்

**புவிதரன்**

(தொழில்நுட்பவியலாளர் நோர்வே)

அவர்களுக்கும்

காங்கேசன்துறையைச் சேர்ந்தஉத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு. சி. சிவசுப்பிரமணியம், திருமதி விஜயலட்சுமி சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி திருநிறை செல்வி

**ரகுணு**

அவர்கட்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி வைபவம் மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற இறைவன் அருள்பாலித்திருப்பதை மகிழ்வுடன் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவர்க்கும் அறியத்தருகிறோம்.

தங்கள் ஆசியை விரும்பும்

செ. புண்ணியமூர்த்தி தம்பதிகள்
''சாவித்திரி இல்லம்''
பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி வடக்கு.
அளவெட்டி.

சி. சிவசுப்பிரமணியம் தம்பதிகள்
''விஜயவாசா''
264/2. யாழ்வீதி,
காங்கேசன் துறை.
(சி 2776)

## 1வது ஆண்டுநினைவஞ்சலி



**மேஜர் சலாம் (ராஜ்குமார்) அவர்கள்**
**(நல்லராஜன் - இமையாணன்)**
தமிழ்த்தாய் கரங்களில்: 17 - 09 - 1956
தமிழர் தம் மனங்களில்: 02 - 06 - 1988

நீ.........
மானிடத்தை நேசித்த மனிதனுக......
தாய்மண்ணின் நாசம் கண்டு
சுதந்திர வேட்கை கொண்ட வீரனுக......
உறுதியுடன் உன் தடங்களை மண்ணில் பதித்தவன்
உன் தியாகங்கள் ........
தமிழர்தம் மனதின் ஆறாத தீக்காயங்கள்......
சுதந்திர தமிழ் மண்ணின் நிரந்தர விடிவு நாளில்
எம் முகம் சிந்திடும் புன்னகை
உன் ஆத்மாவை அமைதி செய்யட்டும்
''விதையாக முன்னரே எருவான''
உன் தியாகம் ஓராண்டு மட்டுமா?
நம் வாழ்நாளும் நிலைத்திருக்கும்.

இமையாணன் மக்கள்

02 – 06 – 1989
இமையாணன்,
உடுப்பிட்டி.
(சி-2786)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

02-06-1989



**தருமசோதி அமிர்தலிங்கம்**

[கல்வித்திணைக்களம் அநுராதபுரம்]

ஆண்டவன் படைப்பு;
9-02-1955

ஆண்டவன் அடியில்:
17–05-1985

உயிரினும் இனிய தருமசோதி அநுராதபுரத்தில்அவலத்திடையே சிபியிடம் ''காப்பாய்'' என்ற புறுவாய் காப்பகம் சென்றாய் காடையர்க் கந்தி வேலியே பயிரை மேய்வதுபோல வீரமில்லான் விலங்காய்ச் சுட்டான் துடிதுடித்து மாண்டாய் துயருடன் வாழ்கிறோம் என்று வருவாய் எம்துயர்தீர்க்க.

குடும்பத்தினர்

44/1. அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
(சி-2777)

## விற்பனைக்கு

பதனிப்பட்ட பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு.
COUNTRY OF ORIGIN HOLLAND

**பிள்ளையார்**

269, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்
(சி-2785)

## பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி திட்டம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் அறவழிப் போராட்டக் குழுவினால் யாழ். கல்வித் திணைக்களத்துடன் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்ட பாலர் கல்வித்திட்ட பாடங்களில் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி 300 மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும். சனி, ஞாயிறு தினங்கள் பொது விடுமுறைத் தினங்களில் பயிற்சி நடைபெறும், யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகள், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் க. பொ. த. (சா) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்ததுடன் மொழி, கணிதம் போன்ற இரு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் அவசியம். ஏற்கனவே கிராமப்புறங்களில் பாலர்பாடசாலை ஆசிரியர்களாக சேவை செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

300 மணித்தியாலங்களைக்கொண்ட இப்பயிற்சியை முழுமையாக முடித்து பரீட்சையில் சித்தியடைந்தவருக்கே சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி, செய்முறை, விரிவுரை இரண்டும் சமகாலத்தில் இடம் பெறும். பயிற்சியில் பங்குகொள்ளவிரும்புவோர் 07-06-1989-க்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

பயிற்சி 15-06-1989-ல் ஆரம்பமாகும். பயிற்சி இலவசமாக நடாத்தப்படுகின்றது. பயிற்சியில் பங்குபற்றும் பயிற்சியாளர்களுக்கு தேனீர் சிற்றுண்டி இலவசமாக வழங்கப்படும்.

செயலாளர்
அறவழிப் போராட்டக்குழு
த. பெ. இல: 2
சாவகச்சேரி.
(சி 255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேட்டோ அமைப்பு ஒருமித்தால்

# சோவியத் நெருக்குதலை தவிர்க்கலாம்

## அமெரிக்க அதிபர் உரை

(பிறசெல்ஸ்)

**"நேட்டோ அமைப்பு நாடுகள் ஒருமித்து இயங்குவதன் மூலம் சோவியத் யூனியனின் ஆயுதக்குவிப்பு நெருக்குதலைத் தவிர்க்க முடியும். ஐரோப்பிய நாடுகள் ஒன்ருக இணைந்த பின்னர்தான் பனிப்போருக்கு முடிவு ஏற்படுமென அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.**

நேட்டோ அமைப்பு நாடுகளிடையே பிறசெல்ஸில் நடைபெற்றமாநாட்டில்உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார், அங்கு அவர் மேலும் பேசுகையில்;

ஐரோப்பிய வட்டகையில் ஏற்பட்டுள்ள பிரிவுகளுக்கு முடிவுகட்டும் காலம் வந்துள்ளது. மேற்கு-கிழக்கு ஜேர்மனிடையே உள்ள பெர்லின் பிளவுச்சுவரை இடித்துத்தள்ள வேண்டும். இதன் மூலம் ஒருமித்த ஜேர்மன் உருவாகும் என்ருர். இதற்கு சோவியத்தின் ஒத்துழைப்பையும் அவர் கேட்டுக்கொண்டார்.

பதினுறு நாடுகளைக் கொண்ட இந்த நேட்டோ அமைப்பு மாநாட்டில் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளிலிருந்து அமெரிக்க, சோவியத் படைபலக்குறைப்பு தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது.

இவ்வகையில் இரு நாடுகளும் சுமார் மூன்று லட்சம் படை வீரர்களையும் ஏனைய பீரங்கி, கனரக, ஏவுகணைகளையும் குறிப்பிட்ட அளவில் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் கேட்கும் தீர்மானமொன்றும்நிறைவேற்றப்பட்டது. இதேவேளை சோவியத்யூனியன் ஐரோப்பாவிலிருந்து தனது படைபலத்தைக் குறைக்க இருப்பதாகக் கூறிய தீர்மானத்துக்கும் இங்கு வரவேற்புக்கிடைத்துள்ளது.

மேற்படி சகல பிரச்னைகள் தொடர்பாகவும் மேலதிக பேச்சுகள் நடாத்த அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் அடுத்த சிலவாரங்களில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரைச் சந்திக்க லண்டன் செல்வாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய திரைப்பட விருது

(புதுடில்லி)

இந்தியாவின் 36வது தேசிய திரைப்பட விருதுகளை ஜனுதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் வழங்கிள்ளனர்.

புகழ்பெற்ற 'தாதாசாஹிப் பால்கே'விருது பழம்பெரும் நடிகர் அசோக்குமாருக்கு வழங்கப்பட்டது. நடிப்பு, இயக்கம், ஒளிப்பதிவு, சிறந்த படமென 'பிறவி' என்ற மலையாளப்படத்திற்கு நான்கு விருதுகள் கிடைத்தன. இந்த படத்தில் சிறப்பாக நடித்தமைக்கு நடிகர் பிரேம்ஜி அகில இந்திய சிறந்த நடிகருக்கான விருதை பெற்ருர்.

தெலுங்குப்படமான 'தாசி'யில் சிறப்பாக நடித்தமைக்காக அகில இந்திய சிறந்த நடிகைக்கான விருதை நடிகை அர்ச்சனு பெற்ருர்.

கே. பாலச்சந்தர் இயக்கிய 'ருத்ர வீணு'என்றதெலுங்குப் படத்திற்கும் நான்கு சிறப்பு விருதுகள் கிடைத்தன.

நாபேந்து கோஷ் இயக்கிய 'திரிசிற்னி' என்ற இந்திப் படத்திற்கு இயக்குனரின் சிறந்த படத்திற்கானஇந்திராகாந்தி விருது கிடைத்தது.

சிறந்த இசையமைப்பாளராக இளையராஜாவும், சிறந்த பின்னணிப் பாடகராக எஸ். பி. பாலசுப்பிரமணியமும். சிறந்த பாடகியாக சித்திராவும் விருதுபெற்றனர்.

## பதினெரு வயது மருத்துவ கல்லூரி மாணவன்

(லண்டன்)

உலகின் முதலாவது வயது குறைந்த மாணவன் அமெரிக்க பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாணவன் இந்தியாவில் இருந்து வந்துள்ளார். இவருக்கு வயது பதினொன்று.

பம்பாயிலுள்ள பால் மோடிகல்லூரியில்படித்த பாலமுரளி அம்பாடி என்ற சிறுவனே, மருத்துவக் கல்லூரி அனுமதியைப் பெற்ற உலகில் வயது குறைந்த முதலாவது மருத்துவ மாணவன் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இவரது அறிவுத்திறமைக்கு ஏற்ற பாடசாலை அங்கு இல்லாமையால் இவரை அமெரிக்க பல்கலைக்கழகத்தில் சேர்த்திருப்பதாக அவரதுபெற்ருேர் பத்திரிகை ாளர்களுக்கு தெரிவித்துள்ளனர். இவரது சகோதரர் 'எயிட்ஸ்' நோய் பற்றிய நூல் ஒன்றை எழுதி உலகப்பிரசித்தி பெற்றவர்.

## அவர்கள் மீண்டும் வருவர்

(யாழ்ப்பாணம்)

மந்திகை ஆஸ்பத்திரியில் கடமையாற்றி தற்போது பிரான்ஸ் சென்றுள்ள அந்நாட்டு கண் வைத்தியர்கள் மீண்டும் ஜூலை மாதம் யாழ்ப்பாணம் வருவார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தமுறை இவர்கள் கண் சிகிச்சைகளையும், கண்ணுடி வழங்குதலையும் மீண்டும் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புதுடில்லியில் வேலை நிறுத்தம்:

## வைத்தியர் - பொதுமக்கள் கைகலப்பு

# பொலிஸார் தலையீடு

(புதுடில்லி)

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் வைத்தியர்களுக்கும், பொதுமக்களுக்குமிடையில் பெரும் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்தபோது ஏற்பட்ட மோதலில் வைத்தியர்கள், பொலிஸார், பொதுமக்கள் உட்படப் பலர் காயமடைந்தனர்.

புதுடில்லியிலுள்ள ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த சுமார் 3,500 வைத்தியர்கள் அதிக சம்பளம் கோரிக் கடந்த 15 நாட்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனுல் நோயாளிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையைப் பொதுமக்கள் எதிர்த்துள்ளனர்.

நோயாளிகள் பெருமளவில் பாதிக்கப்படுவதால் வெளி இடங்களிலிருந்து வைத்தியர்களை அழைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரி ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் இந்த ஆர்ப்பாட்டம் வைத்தியர்களிடையே பெரும் ஆத்திர நிலையை ஏற்படுத்தியது,

இதை அடுத்து ஏற்பட்ட பெரும் கைகலப்பில் முப்பதுக்கும் மேற்பட்ட வைத்தியர்களும், பத்துப் பொலிஸாரும் பொதுமக்கள் பலரும் பலத்த காயமடைந்துள்ளனர் எனினும் ஒருவாறு பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

தற்போது புதுடில்லியில் வைத்தியசாலைகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்புபோடப்பட்டுள்ளதுடன் வைத்தியர்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது

## உணவு முத்திரைகள் அனுப்பிவைக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திலிருந்து குடாநாட்டிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உணவு முத்திரைகள் யாவும் பொது மக்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் இந்த முத்திரைகள் யாவும் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூன் மாதத்திற்குரிய உணவுப் பொருட்களுடன் ஏப்ரல், மே மாதத்திற்குரிய பொருட்களும் உணவு முத்திரைக்கு வழங்கப்படலாம் என்று அறியப்படுகிறது.

### உதவிப்பொருட்கள் கொண்டு சென்ற

# ஐ. நா. குழு மீது தாக்குதல் நால்வர் பலி

(நைரோபி)

தெற்கு சூடான் பகுதியில் ஐ. நா. உதவிப் பொருட்களைக் கொண்டு சென்ற குழு மீது இனந்தெரியாத கோஷ்டி ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் நால்வர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

இருபது லொறிகளில் 270 தொன் உதவிப் பொருட்கள் கொண்டுசெல்லப்பட்டபோது கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் இத் தாக்குதலில் இருவர் பலியானதாகவும் மற்ருேர் தாக்குதலில் இருவர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தெற்கு சூடானில் கிழக்கு ஈக்குவற்ரோறியா மாநிலத்திற்கு உவிப்பொருட்கள் கொண்டுசெல்வப்பட்டபோதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

## 2 லட்சம் இளைஞர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி

(கொழும்பு)

நாட்டு அபிவிருத்தி, இளைஞர் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு 2 லட்சம் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்நுட்பத் துறைகளில் பயிற்சி அளிக்கும் புதிய பாரிய திட்டமொன்றை இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு தயாரித்துள்ளது. கல்வி அமைச்சு உயர்கல்வி அமைச்சு, தொழில் அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் மூன்று வருட காலத்தில் இளைஞர்களுக்கு இப் பயிற்சியை பெற்றுக் கொடுக்கும் இத்திட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது.

இவர்களுக்கான தொழில் நுட்ப பயிற்சியை தேசிய தொழிற்பயிற்சிச் சபை வழங்கும். இத்துறைகளில் பயிற்சி பெறும் இளைஞர் யுவதிகளுக்கு ஊக்கம் அளிக்கும் முகமாக மாதாந்தம் 450 ரூபா அலவன்ஸ் வழங்கப்படும்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் தேசிய தொழிற் பயிற்சிச் சபையில் வெற்றிகரமாக பயிற்சியை முடித்து வெளியேறும் இளைஞர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள், கல்வி அமைச்சின் தொழில் நுட்பக் கல்லூரிகளின் டிப்ளோமாச் சான்றிதழ்களுக்கு சமமானதாக தரம் உயர்த்தப்படவுள்ளது. இது தொடர்பாக இளைஞர் விவகார விளையாட் த்துறை அமைச்சு, கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளவுள்ளது. அதேநேரம் பல்கலைக் கழகங்களை விட்டு வெளியேறும் பட்டதாரிகளுக்கும், பாடசாலைக் கல்வியை முடித்து தொழில் தேடும் இளைஞர்களுக்கும் பொருத்தமான வேலைவாய்ப்புகளை தேடிப் பெற்றுத் தரும் சேவை நிலையம் ஒன்றை அமைக்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது என அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து)

## இந்திய பிரஜைகளுக்கு பாதுகாப்பு வழங்குக!

### தூதரகம் கோரிக்கை

(கொழும்பு)

தென்பகுதி தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளிலிருந்து இந்திய பிரஜைகளுக்கும் அவர்களது தொழில் ஸ்தாபனங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு இலங்கை அரசிடம் இந்திய தூதரக அதிகாரி ஒருவர் கேட்டுள்ளார்.

இந்திய வங்கிகள், கம்பனிகள், வர்த்தக ஸ்தாபனங்கள் உட்பட சகல இந்திய பொருட்களையும் பகிஸ்கரிக்குமாறுக தென்பகுதி தீவிர வாதிகள் அண்மையில் எச்சரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர். இந்த நடவடிக்கை எதிர்வரும் 15 ம் திகதி முதல் அமுல்படுத்தப்படுமென்றும் அந்த தீவிர வாதிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே இந்திய பிரஜைகளினதும், உடமைகளிற்கும் பாதுகாப்பு வழங்குமாறு இந்திய தூதரகம் இலங்கை அரசிடம் கேட்டுள்ளது. இந்த எச்சரிக்கை தமது கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான தகுந்த பாதுகாப்பை இலங்கை வழங் [illegible] ஒருவர் இந்திய தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பயிற்சித்திட்டம்

(சாவகச்சேரி)

பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான பயிற்சித்திட்டம் ஒன்றினை அறவழிப்போராட்டக்குழு இம்மாதம் 15-ம் திகதி முதல் நடாத்தவுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்துக்கான நிதிஉதவியை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஆங்காரம் என்னு மதயானை வாயில் கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ?

— தாயுமானவர்.

# நமது நோக்கு

## பாகுபாடு ஏன்?

டாக்டர்கள் நியமனம் சுகாதாரத் திணைக்களத்தில் ஒரு சிக்கலை உருவாக்கியிருக்கிறது.

நியமனங்களைச் செய்கின்ற மருத்துவக் கவுன்சிலுக்கும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கும் (G. M. O. A) கருத்துவேறுபாடு தோன்றியுள்ளது.

இலக்கம் 29 என்றுமே பிரச்னைக்குரிய தாகிவிட்டது. சோல்பரித் திட்டத்தில் 29வது விதி சிறுபான்மையோர் உரிமை பற்றியது. சர்ச்சைக்குள்ளாகி 1972 புதிய யாப்பிற் கைவிடப்பட்டது.

டாக்டர்கள் நியமனம் பற்றிய விதியும் இலக்கம் 29, இதன்படி வெளிநாட்டில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் பரீட்சை ஒன்றை எடுக்கவேண்டும். சிறீலங்கா மருத்துவச் சட்டவிதிகளையும் (Forensic Medicine), சமூக உடல் நலக் கல்வியையும் (Community Medicine) அறியாதவர்கள் எனக் கூறப்படுகின்றது,

மருத்துவப் பட்டத்தின் உயர் தரத்தினையும், தொழில்சார் மகத்துவத்தையும் பேணிக் காப்பதில் வைத்திய அதிகாரிகள் சங்கம் காட்டும் அக்கறையை நாம் மதிக்கிறோம்,

ஆனால், கொள்கைக் குழப்பமும், எல்லா வெளிநாட்டு மருத்துவப் பட்டங்களை எடுத்தெறிந்து மதிப்பிடுவதும் பாகுபாடுகள் காட்டுவதும் எமக்குப் புரியாத புதிராகவுள்ளன.

குறைந்த புள்ளிகள் பெற்றவர்கள் கூட வெளிநாட்டுக்குச் சென்று மருத்துவப் பட்டம் பெற்று வந்துள்ளார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள், இதில் உண்மை இருக்கலாம்! ஆனால் கண்ணாடி வீட்டிற்குள் இருந்துகொண்டு கல்லெறியலாமா?

தரப்படுத்தற் கொள்கையின்படி கூடிய புள்ளிகள் பெற்றவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு குறைந்த புள்ளிகள் பெற்றவர்கள் அனுமதிபெற்றிருக்கிறார்களே, மருத்துவபீடத்திற்கு!

''1987ல் வெளிநாட்டு டாக்டர்கள் நியமனத்தின் போது எதிர்ப்பில்லை: இப்போது எதிர்ப்பு ஏன்?'' கேள்வி எழுப்புகிறது வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகள்சங்கம் (O. Me, G. A).

இச் சங்கத்தில், அரசாங்கப் புலமைப் பரிசில்பெற்று வெளிநாட்டில் ஆறுவருடங்கள் பயின்ற டாக்டர்களும் இருக்கிறார்கள்.

கியூபா, பர்மா, பிலிப்பைன்ஸ், இந்தியா நாடுகளைச் சேர்ந்த டாக்டர்கள் மருத்துவப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்

ஆனால் அந்நாடுகளிற் பயின்ற இலங்கை டாக்டர்களுக்கு ஏன் பாகுபாடு? குறிப்பாகச் சோசலிச நாடுகளில் மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டு டாக்டர்களுக்கான தொழில்சார், அறிவு, மொழியறிவுக்கான பரீட்சை பிரித்தானியாவில் உண்டு. கொழும்பு, பேராதனை மருத்துவ பீடங்களைத் தவிர்ந்த ஏனைய பீடங்களைச் சேர்ந்தவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவது இன்றும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

இதைவிட, இன்னோர் நியமனச் சிக்கலும் எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், றுகுணு, பேராதனைப் பல்கலைக் கழகங்களிற் சித்தியடைந்த பலருக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை. எதிர்வரும் செப்தெம்மர் மாதத்தில் தான் நியமனம்.

நாட்டின் அசாதாரணச் சூழ் நிலையிலும், பல இன்னல்களைத் தாங்கிக் கொண்டு, பெரும் பொருட் செலவிற் பயின்று சித்தியடைந்தவர்கள் காத்திருக்க வேண்டும்!

காரணம் என்ன? கொழும்பு மருத்துவபீட இறுதியாண்டுப் பரீட்சை இன்னும் நடைபெறவில்லை. எதிர்வரும் ஆகஸ்ட்டில் பரீட்சை நடாத்தி, செப்தெம்பரில் அவர்களுக்கு நியமனம் வழங்கும் போது தான் இவர்களுக்கும் நியமனமாம்! எப்படியிருக்கிறது நியாயம்?

## ஆசிரியர் பற்றுக்குறை நீக்க நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

உரும்பராய் ஞே. க. த.க. பாடசாலையில் பெரும் ஆசிரியர் பற்றுக்குறை நிலவுவதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கல்விப்பகுதியினருக்கு முறைப்பாடு செய்துள்ளது.

பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்கள் பயிலும் இப்பாடசாலை இரண்டு ஆசிரியர்களுடனும் ஒருபகுதிநேர ஆசிரியருடனும் மட்டுமே இயங்கி வருவதாக சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

344 மாணவர்கள் பயிலும் இப்பாடசாலைக்கு 10 ஆசிரியர்களும் பகுதிநேர ஆசிரியர் ஒருவரும் தேவையென சங்கம் கோரியுள்ளது.

மேற்படி சங்கம் இக்குறைபாடு குறித்து மருதனுமடம் கோட்டக்கல்வியதிகாரி திரு. இ. க. குலசேகரனுக்கும் முறைப்பாடு செய்துள்ளது.

இம்முறைப்பாட்டையடுத்து கோட்டக்கல்வியதிகாரி உரும்பராய் கொத்தணி அதிபருடன் தொடர்பு கொண்டு இப்பாடசாலையின் ஆசிரியர் பற்றுக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் உத்தம சீடரான கைதடி மார்க்கண்டு சுவாமிகளின் 5-வது குருபூசை இன்று கைதடியில் நடைபெறவுள்ளது. [illegible] களது ஆச்சிரமத்தில் இன்று காலை 8-00 மணிக்கு இந்தக் குருபூசை ஆரம்பமாகும்.

### சிந்திக்க சிரிக்க

# சபையில் நடந்த சூடான சர்ச்சைகள்

— பாராளுமன்றத்திலிருந்து நமது நிருபர்

பாராளுமன்ற வளவுக்குள் மேலதிகமாக பொலிசார் ஆயுதங்களுடன் வந்திருப்பதாக பாராளுமன்றத்தில் கம்பஹா மாவட்ட (ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி) எம்.பி.கூறிய போது சூடான வாக்குவாதமும், சர்ச்சையும் கிளம்பியது. இதனால் பாராளுமன்றத்தைப் 10 நிமிடநேரம் ஒத்திவைக்க வேண்டியிருந்தது.

மாகாணசபைகள் (இடைநேர் ஏற்பாடுகள்) மூலத்தின் மீதானவிவாதம்நடந்தபோது பிற்பகல் 5-15 மணியளவில் கம்பஹா மாவட்ட எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்ற வளவுக்குள் 500க்கும் அதிகமான பொலிசார் இருப்பதாகவும்இதுபற்றி உடனடியாக விசாரிக்கப்பட வேண்டுமெனவும் பிரதிச்சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்,

திரு. தினேஷ்குணவர்த்தன, திரு. ஸ்டான்லி திலகரட்ன, டாக்டர் நெவில் பர்னாந்து உட்பட பல எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் உடனடியாக விசாரிக்கப்படவேண்டும் எனக் கோஷமிட்டனர்.

இவர்கள் இவ்வாறு கோஷமிடும் நேரத்தில் ''கலகம் அடக்கும் பொலிஸ் படைப் பிரிவும் இங்கு வந்துள்ளதாகத் தெரிகிறது'' என்ற குரல்களும் கேட்டன.

''நாங்கள் சட்ட மூலத்துக்கு எதிராக வாக்களித்தால் அவ்வாறு வாக்களித்தவர்களைத் தாக்குவதற்காகவா இந்தப் படைப்பிரிவு கொண்டுவரப் பட்டுள்ளது. நாங்கள் அதற்கு பயப்படமாட்டோம்'' என ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் ஆக்ரோஷமாக சத்தமிட்டார்.

விடயத்தை விசாரிக்க பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தபோது மாலை 5-30 மணியளவில் ''10 நிமிடநேரம் ஒத்திவைப்பதாக'' பிரதிச்சபாநாயகர் தெரிவித்தார்.

இப்பத்து நிமிட இடைவேளையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்ற வளவுக்கு வெளியே சென்றுபொலிசாரைவிசாரிப்பதையும் அவர்களுடன் வாக்குவாதப்படுவதையும் காணமுடிந்தது.

பின்பு மீண்டும் பாராளுமன்றம் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச், முகம்மது தலைமையில் கூடியது. அப்போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்விடயமாகவே பேசினர். எங்கும் கூச்சலும், ஆரவாரமும் அதிகமாக இருந்தது. எதையும் கேட்க முடியவில்லை. சபாநாயகர் மேலதிக பொலிசாரை உள்ளேநுழைய அனுமதிப்பதில்லை என உறுதியளித்தார்.

சிறிதுநேரத்தின்பின் பிரதிச் சபாநாயகர் தலைமையை ஏற்றார் இப்பிரச்னை மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர் பொலிசார் இன்னும் அங்கிருப்பதாக கூச்சலிட்டுக் கத்தினர். அவர்களை இங்கே அழைத்து வந்தவர்கள் யார் என்ற கூக்குரல்கள் எங்கும் ஒலித்தது

அவ்வேளையில் பிரதிச் சபாநாயகர் ''நீங்கள் அமைதியாக இருப்பீர்களானால் நான் உண்மையைச்சொல்வேன்பொலிஸ் மா அதிபருக்கு ஒரு தகவல் கிடைத்துள்ளது. நீங்கள் மக்களை இங்கே அழைத்துவந்து ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக தகவல் கிடைத்தனால் தான் பொலிசார் இங்கு வந்துள்ளனர் என்றுதெரிவித்தார்

எதிர்க்கட்சியினர் மீண்டும் கூச்சலிட்டனர். இதனைத் தொடர்ந்து சபாநாயகர் தலைமையை ஏற்றுக்கொண்டார்.

''பிரதிச் சபாநாயகர் இங்கு வெளியிட்ட கூற்று பிழையானது. அதனை அவர் வாபஸ் வாங்கி மன்னிப்புகோரவேண்டும்'' என திரு. அனுரா பண்டாரநாயக்கா, திரு. தினேஸ் குணவர்த்தன முதலியோர் எழுந்து கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் கடும் வார்த்தைப் பிரயோகங்கள் இருதரப்பிலும் பிரயோகிக்கப்பட்டன. திரு. டர்கள், அயோக்கியர்கள், முட்டாள்கள், நாய்கள் என்ற வாறானவார்த்தைகள் தாராளமாகப் பாவிக்கப்பட்டன. அரசதரப்பு உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்படக்கூடியநிலை ஏற்பட்டிருந்தது. அமைதியை ஏற்படுத்த சில மூத்த உறுப்பினர்கள் இருபக்கத்திலும் முயன்றனர்.

பிரதிச் சபாநாயர்அவ்வாறு தெரிவித்திருந்தால் அதனை அவர் வாபஸ்வாங்கவேண்டும் எனினும் இதுபற்றி தேடிப் பார்த்த பின்பே முடிவு எடுக்கப்படலாம் எனத்தெரிவித்த சபாநாயகர் விவாதத்தை தொடர்ந்து நடத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

விவாதம் முடிந்ததும் நான் பிரதிச்சபாநாயகரின் ஒலிப்பதிவு நாடாவினை கேட்டுப் பார்த்தேன். பிரதிச்சபாநாயகர் அவ்வாறுதான் பேசியிருக்கிறார். இவ்வாறு அவர் கூறியது தவறானது. அதனை அவர் வாபஸ் வாங்கவேண்டும்'' என சபாநாயகர் தெரிவித்ததைத்தொடர்ந்துஎதிர்க்கட்சி உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இதனைத்தொடர்ந்து பேச்சை வாபஸ் வாங்கப் போவதில்லை எனக்கூறி பிரதிச் சபாநாயகர் வெளிநடப்புச் செய்தார்.

## யாழ்.பல்கலைக்கழகம் சிற்றூழியர் வேலைவாய்ப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் சிற்றூழியர்களை புதிதாக வேலைக்கமர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 6-ம் திகதி முதல் தொடர்ந்து நடைபெறும் எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

தொழிலாளர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கே இந்த நேர்முகப்பரீட்சைகள் நடைபெற விருக்கின்றன.

### மக்கள் நன்மை கருதி

## சட்டங்கள் விதிகள் பற்றி புதிய திட்டம் அறிமுகமாகும்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சட்டங்கள் பற்றி போதிய அறிவு இல்லாத நிலையில் இருக்கும் பொதுமக்களுக்கு அன்றாட வாழ்க்கையில் அவசியப்படும் சட்டங்கள். விதிகள் பற்றி விளக்கமளிக்கும் புதிய திட்டமொன்றை நீதி அமைச்சு விரைவில் செயற்படுத்தவுள்ளது.

சட்டத்தின் பிடியில் இருந்து பாதுகாத்துக்கொள்ள ''சட்டம் தெரியாது'' என்ற வாதம் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இலங்கையில் உள்ள பெருமளவு மக்கள் அடிப்படை சட்டஅறிவு இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் ஒரு பிரச்சினை வந்த பின்பே சட்டம் தெரியாமல் அவதிப்படவேண்டியுள்ளதை அறிந்து கொள்கின்றனர். சட்டம் தொடர்பான விபரங்கள் இவர்களுக்கு தெரியாமல் இருப்பதன் காரணமாக உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்து வருகின்றனர் என நீதி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய திட்டத்தின் பிரகாரம் ஆரம்ப கட்டமாக சிறைச்சாலைத்திணைக்களம், லஞ்ச ஆணையாளர் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களம், நீதிச்சேவை ஆணைக்குழு முதலிய அமைச்சின் கீழ் இயங்கும் தாபனங்கள் தொடர்பான சட்டவிதிகள், நடவடிக்கைகள் சேவைகளை பொதுமக்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

அத்துடன் குற்றவியல் சட்டக்கோவை, விவாக, விவாகரத்து சட்டங்கள் சொத்துக்கள் தொடர்பான சட்டங்கள், விவசாயம், வயல்நீர் பங்கிடு தொடர்பான சட்டங்களில் பொது மக்களுக்கு போதிய அறிவை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்தவும் துண்டுப் பிரசுரங்கள் கைநூல்கள் போன்றவற்றை நடத்தவும் அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (து)

### மதிய உணவு:

## மாணவர் வரவு அதிகரிப்பு

(அராலி)

வட்டுக்கோட்டைப் பகுதியில் மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து பாடசாலைகளில் தற்போது மாணவர் வரவு அதிகரித்துள்ளது.

நீண்டகாலமாக பாடசாலைக்குச் சமுகமளிக்காத மாணவர்களும் இடையிடையே பாடசாலைக்குச் சமுகமளிக்கும் மாணவர்களும் தற்போது தொடர்ந்து ஒழுங்காகச் சமுகமளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உபகரணங்கள் வழங்கப்பட்டது

[சாவகச்சேரி]

வன்செயல்கள் காரணமாக தகப்பன்மாரை இழந்த நூறு பிள்ளைகளுக்கு, அறவழிப் போராட்டக்குழு இரண்டாம் கட்ட கல்வி உபகரணங்களை வழங்கியது.

1987ம் ஆண்டு முதல் இப்பிள்ளைகளுக்கு குழு கல்வி உபகரணங்களை வழங்கித் தம் கல்வியைத் தொடர உதவி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கதி தெரியுமா?

## யார் இந்த ஜொனதன்?

பிரெஞ்சு கயானு - பேர் மூயூடா - பஹாமாஸ் - கொங்கோ - ஐக்கிய அமெரிக்கா-கௌடிலூப் - புருண்டு-ஹைத்தி-என்ன இந்த நாடுகளுக்கு?

உலக சுகாதார நிறுவனம் எயிட்ஸ் நோய்பற்றி 1988ன் விபரங்களைத் தொகுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதிலே எயிட்ஸ் நோயில் முன்னணியில் நிற்கும் நாடுகளின் இறங்கு வரிசைதான் அது!

அந்த வரிசையில் உள்ள அமெரிக்காவில் ஒரு பரிதாபக் கதை; ஜொனதனுக்கு வயது ஐந்து-அவன் பிறந்ததும் பீடித்த நோய்க்காக இரத்த மேற்றப்பட்டது. ஆனால் அவனுக்குத் தொற்றிக்கொண்டதோ எயிட்ஸ்!

வீட்டிலேயே கற்பிக்க ஒழுங்குகள்-ஆனால் அதை ஏற்க மறுத்து அடம்பிடித்தான். பாடசாலையிற் சேர தணியாத ஆவல். பெற்ற மனம் பித்து! பெரும் போராட்டிற்குப்பின் தாயார் கொலாறடோவில் ஓர் பாடசாலையில் அனுமதி பெற்றுவிட்டாள்.

பாடசாலையிற் சேர்ந்தவன் சும்மா இருந்தானா? சகபாடிகளுக்குக் கூறியதென்ன?

''என்னிடம் ஒரு நோய் உண்டு. எனது கெட்ட இரத்தம் உங்களுக்கு ஆபத்தானது!

கேட்டுச் சிரித்துவிட்டுத் தொடர்ந்து விளையாடினுர்களாம் அவனோடு!

- வாணி

# மதிய போசனத்திட்டம் ஆரம்பவிழா



யாழ்: நாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த 26ம் திகதி மதியபோசனமாக ''ஜீவாகாரம்' பரீட்சார்த்தமாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

படத்தில் மாணவர்கள் ஜீவாகாரம் உண்பதையும் அருகில் அதிபர் ஆசிரியர்கள், அண்ணா தொழிலதிபர் திரு. எஸ். பி. நடராஜா ஆகியோரும் காணப்படுகிருர்கள்.

# சாவகச்சேரியில் புதிய தொழில் பயிற்சி நிலையம்

(மட்டுவில்)

படித்த இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம்ஒன்று சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தென் இந்தியத் திருச்சபையினர் யாழ். தென் இந்தியச் சபை ஆதினத்தின் ஆதரவின்கீழ் இதை ஆரம்பித்துள்ளனர்.

சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை புனித. தேவாலய வளவினுள் அமைந்துள்ள இத் தொழிற்பயிற்சி நிலையத்தை வணக்கத்திற்குரிய போதகர் வ. இராஜ்குமாரின் பிரதிஷ்டை ஜெபத்துடன், திரு. பாற்றின் ஹன்ற் வைபவ ரீதியாக திறந்துவைத்தார்.

இப்புதிய தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆங்கில கல்வி போதனையுடன், ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, தையற்கலை, மனையியல் கேக் செய்வது போன்ற பயிற்சி நெறிகளும் அளிக்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நெறியில் இப்பொழுது சுமார் 50 இளைஞர்கள் பயிற்சிபெறுகிருர்கள். இப்பயிற்சி நெறிக்குத்தேவையான தட்டெழுத்து இயந்திரங்கள், தையல் மெஷின்கள் உட்பட சகல உபகரணங்களையும் தென் இந்தியத் திருச்சபையினர் கொள்வனவு செய்துள்ளனர்.

## கட்டுவனில் ஐயப்ப சுவாமி ஆலயம்

(மாவிட்டபுரம்)

ஐயப்ப சுவாமியின் பக்தர்கள் வழிபாடு செய்ய வசதியாக சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் ஐயப்ப சுவாமிக்கு ஆலயம் ஒன்று உருவாகி வருகிறது.

இலங்கையின் வடபகுதியிலே முதன் முதலாக உருவாகும் இந்த ஐயப்பன் ஆலயம் கட்டுவனிலுள்ள கரண்டக்குளம் ஐயனர் கோவிலுச்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வருகிறது.

மிகவும் தத்ரூபமான முறையில் 18 படிகளுடன் கூடியதாக அமையும் இவ்வாலயத்தை விரைவில் பூர்த்தி செய்து கும்பாபிஷேகத்தை நடத்திவைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆலயம் 'அகில இலங்கை சபரிகிரி ஸ்ரீ ஐயப்ப சுவாமி பீடம்' என்னும் பெயரைக் கொண்டதாக விளங்கும்.

ஐயப்பதாசன் சி. அருணசலக் குருக்கள் தலைமையில் ஐயப்பன் பக்தர்கள் மேற்படி ஆலயத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## வருடாந்த பொங்கல்

(சுண்டிக்குழி)

வடலியடைப்பு கலைவாணி வீதியில் எழுந்தருளியிருக்கும் மகாகாளி அம்மனின் வருடாந்தப் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் மாலை 6.30 மணிபளவில் நடைபெறும் அம்பாள் பஜனைக் கோஷ்டியினரின் பஜனையைத் தொடர்ந்து விசேட அபிஷேக ஆராதனைகளின் பின் பொங்கல் நடைபெறும்.

## பொருட் காட்சியும் ஏல,விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் திணைக்களத்தினரால் காரைநகர் மணற்பிட்டியில் நடாத்தப்படும் தையல் பயிற்சியில் தைக்கப்பட்ட ஆடைகளின் பொருட்காட்சி 3-ம் திகதி சனிக்கிழமையும், ஏலவிற்பனை 4 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

இந்நிகழ்ச்சி உதவி தொழில் ஆணையாளர் திரு. கே. சிவப்பிரகாசம், தொழில் அதிகாரி திரு. ஏ. நைல்ஸ் தலைமையில் நடைபெறும்,

## 150வயதுப் பாலம்

(மட்டுவில்)

சுமார் நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பெரிய பாலத்தில் இப்பொழுதுதான் சிறுதிருத்த வேலைகள் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கைதடியில் கண்டி வீதியில் 1839ம் ஆண்டு ஜீ. எம். பார்ஜன் என்ற பொறியியலாளரால் இப்பாலம் அமைக்கப்பட்டது.

பெரிய பாரமான வாகனங்கள் செல்லக் கூடிதாக இருந்த இப்பாலம் நீண்டகாலமாகப் பழுதடையாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## திறப்பு விழா

(மட்டுவில்)

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட புதிய மேல்மாடிக் கட்டிடத்தை யாழ். மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி இன்று வெள்ளி பி. ப. 2மணிக்கு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கவுள்ளார்.

# குறைந்தசெலவில்வீடமைப்பு போட்டி முடிவுகள்

(அரியாலை)

ஒவ்வோர் கிராம சேவகர் பிரிவிலும் உள்ளூர் மூலப் பொருட்களைப் பாவித்துக் குறைந்த செலவில் வீட்டினை அமைப்பவர்களில் மூவருக்கு மூவாயிரம் ரூபா ரொக்கப் பணமாக வழங்கப்படவுள்ளது. குறைந்த செலவில் வீடமைக்கும் இந்தப் போட்டி யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுண்டிக்குளி, கொழும்புத்துறை ஆகிய கிராமசேவகர்கள் பிரிவுகளில் அண்மையில் நடந்து முடிந்தது.

சுண்டிக்குளி கிராமசேவகர் பிரிவில் முதலாம் இடத்தை ஆறுமுகம் - சண்முகமும், இரண்டாம்இடத்தை திருமதி விமலராசா – சரோஜாவும், மூன்ருமிடத்தை திருமதி தளையசிங்கம் - நாகேஸ்வரியும் பெற்றுகொண்டனர்.

கொழும்புத்துறை கிராம சேவகர் பிரிவில் முதலாம் இடத்தை திரு. கணபதிப்பிள்ளை–கமலநாதனும், இரண்டாம் இடத்தை திருமதி அலெக்ஸ் செல்வரஞ்சியும். மூன்ரும் இடத்தை வல்லிபுரம் மனோன்மணியும் பெற்றுக் கொண்டனர்.

முதலாம் இடத்துக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும், இரண்டாம் இடத்துக்கு ஆயிரம் ரூபாவும், மூன்ரும் இடத்துக்கு ஐந்நூறு ரூபாவும் வழங்கப்படும்.

யாழ். பிரதேச மட்டத்தில் முதலாம் இடத்தைச் சுண்டிக்குளம் கிராம சேவகர் பிரிவு திரு. ஆறுமுகம் சண்முகமும், இரண்டாம் இடத்தை கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை - கமலநாதனும் பெற்றுக்கொண்டனர்.

பிரதேச மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெறுபவருக்கு இரண்டாயிரம் ரூபா பணம் பரிசாக வழங்கப்படும்.

## பிரேத அறையில் குளிர்சாதன வசதி இல்லை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை பிரேத அறையில் குளிர்சாதன வசதிகள் இல்லாதிருப்பதால் பிரேதங்களை வைத்து பராமரிக்க முடி முடியாத நிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்படும் பிரேதங்கள் மறுதினமே நாற்றம் எடுக்க ஆரம்பித்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக பிரேதங்களை உடன் உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அல்லது அடக்கம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்ாடுவதாக கூறப்படுகிறது.

## நோயாளர் பாதிப்பு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் விசர் நாய்க்கடிக்கான ஊசி மருந்து இல்லாதிருப்பதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

விசர் நாய்க்கடிக்கு இலக்கான நோயாளர்கள் பலர் இவ் வைத்தியசாலைக்கு வந்து ஊசி மருந்து இல்லாமையால் யாழ். ஆஸ்பத்திரிக்கும் மந்திகை ஆஸ்பத்திரிக்கும் அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## மின்சாரம் பெற்றனர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை, தையிட்டி கிழக்கு மூர்த்தி வீதிக்கு நீண்டநாள் கோரிக்கையின் பின் அண்மையில் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள மேற்படி வீதிக்கு மின்சார விநியோகம்செய்யுமாறு தையிட்டி கலாவல்லி சனசமூக நிலையம் நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## உபகரணங்கள் அன்பளிப்பு

(சுன்னுகம்)

''நவாலி அட்டகிரி சைவ பாடசாலை மாணவர்களின் மதியபோசனத் திட்டத்திற்குத் தேவைப்பட்ட தளபாடங்கள் உபகரணங்களை நவாலிப்பகுதி பெற்ருேரும் பாடசாலை நலன் விரும்பிகளும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். எவ். ஆர். எஸ். எஸ். நிறுவனத்தின் அங்கத்தவர்கள் தினமும் இப்பாடசாலைக்குச் சமுகமளித்து உணவு தயாரிப்பதையும் விநியோகிப்பதையும் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

இப்பாடசாலையின் புது வருட உத்தியோகத்தர் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் இ.வல்லிபுரம் (அதிபர்) செயலாளர் பெ. தவரத்தினம் தனாதிகாரி பி. சபாரத்தினம் ஐந்து பேர் கொண்ட நிருவாகக் குழுவும் தெரிவானது.


COMPUTER PROGRAMMING IN
d BASE IV
[LATEST VERSION]

பயிற்சிக் காலம்: 2 மாதம் ஆரம்பம்: 4-6-89 (சனி, ஞாயிறு வகுப்புகள்)

0 LOTUS 1-2-3 0 WORD PROCESSING

பயிற்சிக்காலம்: 1½ மாதம் ஆரம்பம்: 6 - 6 - 89 (செவ். வியா.)

சேரும் பொழுது செலுத்தவேண்டியது 500/- மாத்திரம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M. (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப்பெற்று பதிவு செய்துகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 3-6-89.

UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சாரநிலைய வீதி, [2-ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம்.

(உப தபாற்கந்தோர் அருகாமை)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இராசி பலன்

**02- 06 - 1989**

திரயோதசி காலை 7-05 வரை
சதுர்த்தசி பி. இ. 4-07 வரை
பரணி பகல் 11-46 வரை
சித்தயோகம்
கார்த்திகை விரதம்
சுபதிடி மன்று
இராகுகாலம்
10-22—11-56 வரை

மேஷம்: சகோதரர் பகை, குடும்பத்தில் உட்பூசல், பணக் கஷ்டம், காரியதடை, மனச் சுமை.

இடபம்: தொழில்துறை முன்னேற்றம், எதிர்பாராத விருந்தினர், குடும்பநலம், சயனபோஜன சுகம்.

மிதுனம்: வீண்பழி கேட்டல், கோபமிகுதி, அலைச்சல் குடும்ப சுகமின்மை, அதிகாரிகள் தொல்லை.

கடகம்: பயண அனுகூலம், கடன்தரவு, அறிஞர் சந்திப்பு, வெற்றி.

சிங்கம்: புதிய பதவி நண்பர்கள் சகாயம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தந்தையர் உதவி.

கன்னி; கடன்படல், கண்ணிய குறைவு, மனச்சங்கடம். வெறுப்பு

துலாம்: விபத்து, மனைவியால் துன்பம், யோசனை மிகுதி, தொழில் பாதிப்பு பணச் செலவு,

விருச்சிகம்: குடும்பத்தில் அமைதி; மனமாற்றம், எதிரிகள் உதவி, பணவரவு, பாராட்டு,

தனுசு: பயணத்தால் லாபம், அதிக நன்மை, கடித அனுகூலம், மனமகிழ்ச்சி, உறவு,

மகரம்: தொழில் பாதிப்பு, பணமுடை, சிறுபிணி, உறவினர் தொல்லை, வெளியூர் பயணம், அலைச்சல்,

கும்பம்: எதிர்வாதம், பொருட்செலவு, குடும்ப விரிசல், மனைக்கஷ்டம், மக்களால் கவலை,

மீனம்: உல்லாசப் பயணம், குடும்பத்தில் சுபநிகழ்ச்சி, தொழில் முயற்சி, மாதாவழி நன்மை சிறப்பு.

# பாடசாலை கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணம் பாடசாலை கிரிக்கெட் சங்கம்'' யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே வருடாவருடம் நடாத்தி வரும் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

இப்போட்டி 17 வயதுக்குட்பட்டவர்களுக்கும், 15 வயதுக்குட்பட்டவர்களுக்குமாக இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படுகின்றன.

இப்போட்டியில், 17-வயதுக் குட்பட்டவர்களின் 'ஏ' பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், சென், ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ், இந்துக் கல்லூரி.

'பி' பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி.

15-வயதுக்குட்பட்டவர்களின் 'ஏ' பிரிவில், யாழ், மத்திய கல்லூரி, சென், பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

'பி' பிரிவில்: மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

நாளை ஆரம்பமாகும் இவ் ஆட்டத்தில் 17-வயதுப்போட்டியில் 'ஏ' பிரிவில்; கொக்குவில் இந்துக் கல்லூரி - கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தை, கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் எதிர்த்து மோதும்.

2-வது ஆட்டத்தில், சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதும்.

3-வது ஆட்டத்தில், யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மோதும்.

4-வது ஆட்டத்தில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் மோதும்.

15-வயதுக் குட்பட்டவர்கள் பிரிவில்; சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதும்:

யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதும், (வி)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிடையே ஆண்டுதோறும் நடாத்தப்படும் மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 3-ம்,4-ம் திகதிகளில், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மொத்தம் 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமிருந்து பெருந்தொகையான ஆண்களும், பெண்களும் கலந்துகொள்கின்றார்கள்.

கடந்தவருடம் நடைபெற்ற இப் போட்டியில், ஆண்கள் பிரிவில் கோப்பாய் உதவிஅரசாங்கஅதிபர்பிரிவும்பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவும் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டன. [வி]

## சென்.நிக்கிலஸ் ச. ச. நிலைய உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

நாவந்துறை சென். நிக்கிலஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- எஸ். தொம்மை, செயலாளர்- ஈ. எல்மோ ஜோசப், பொருளாளர்- பி. ஜோர்ஜ், விளையாட்டுத்தலைவர்- ஆர். ஸ்ரீ, போஷகர்களாக வண. பிதா. சாள்ஸ் செந்தில்வேல், முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தர் எஸ். சொலமன் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (வி)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

''அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் உதைபந்தாட் மத்தியஸ்தர்களைத் தெரிவுசெய்யும்முகமாக அண்மையில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடாத்திய பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

3-ம் தர ஆரம்ப மத்தியஸ்தர்களாக பத்துப் பேரும், 2-ம் தர மத்திஸ்தர்களாக மூன்று பேரும் சித்தியடைந்துள்ளார்கள்,

3-ம் தர மத்தியஸ்தர்களாக சித்தியடைந்தோர் விபரம்: எம்.கதிரவேல்-[illegible], எஸ். துரைசிங்கம்-சுன்னாகம், எஸ். அல்வின்-பாஷையூர், கே. பீலிக்ஸ்-குருநகர், எம். சிவதாசன்-புத்தூர், வி. விக்கிரமசிங்கம்-இளவாலை, என். நடராஜா சண்முகநாதன் - அராலி, எம். இன்பரட்ணம்-கிளிநொச்சி, ஆர். புவனேந்திரன்-கிளிநொச்சி, பி.கிருபாகரன்-சண்டிலிப்பாய்.

2-ம் தர மத்தியஸ்தர்களாக சித்தியடைந்தவர்கள் விபரம்: ரி.வரதராஜா- பருத்தித்துறை கே. குலராஜேந்திரன்-பருத்தித்துறை, எம். கிருஷ்ணனந்தன்-பருத்தித்துறை, (வி)

# இல்லறம், அரசியல், போரியல் என பல்வகைச் சிறப்புடையது கந்தபுராணம்''

- நா. சுப்பிரமணியன்

மார்க்கண்டேயர்படலத்தில் மேலும் சிவன், விநாயகன், கந்தன் ஆகியோருக்குரிய விரதங்களின் பெருமை, அவைகளைக் கடைப்பிடிக்கும் முறை என்பன விளக்கப்படுகின்றன.

### தத்துவ நூல்

சமய தத்துவ நூல் என்ற வகையில் கந்தபுராணம் பிறமதங்களையும், அவைகளின் தத்துவங்களையும் வெளிப்படையாகவே கண்டனம் செய்கிறது.

குறிப்பாக வைணவமதமும், 'அத்வைதம்' 'பூர்வமீமாம்சை ஆகிய தத்துவ தரிசனங்களும் இந்நூலில் கண்டனத்துக்குரியன வாகின்றன.

கந்தபுராணத்தின் முக்கிய கதையம்சம் 'அத்வைத' கண்

> யாழ்-எவிலின் ரட்ணம் நூலகத்தில் 'கந்தபுராணம்' சிறப்புப்பற்றி யாழ், பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியன் ஆற்றிய சிறப்புரைத் தொடரின் இறுதிப்பகுதி.

டனத்தை நோக்காகக் கொண்டே புனையப்பட்டுள்ளது.

சூரபன்மனுக்கு அவரின் தந்தை 'காசிபர்' போதித்த முப்பொருள் உண்மையை அசுர குருவான சுக்கிராச்சாரியார்' மறுத்துஅத்வைதமாகிய ஏகான்மவாதத்தை முன்வைக்கிறார்' 'ஏகான்மவாதமே' உண்மை எனக்கொண்ட நிலையிலேயே சூரபன்மன் கொடுங்கோன்மையான ஆட்சியை நடாத்தினான் என்று கதைப் போக்கு காட்டுகிறது. ஈற்றில் முருகப்பெருமானின் அருளாற்றலால் சூரபன்மன் அடக்கியாளப்படும் நிலையில் அவனது அந்தத்துவப்போக்கு நீங்குகிறது என்று கதையில் தெரிவிக்கப்படுகிறது. அதாவது, சைவ சித்தாந்தத்தின் முன் அத்வைதம் தோற்று வீழ்ச்சி அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'தக்க காண்டத்தில்', தக்கன் சிவனை விலக்கிவிஷ்ணுவை [illegible] அம்சமாக 'வீரபத்திரர்' தோன்றி அந்த யாகத்தை சிதைத்தழிக்கிறார். அதில் பங்குபற்றிய தேவர் முதலானோரையும் தண்டிக்கிறார்.

இந்த யாகத்தில் பங்கு கொண்ட பாவமே பின்னர் சூரபன்மனிடம் தேவர்கள் துன்புறுவதற்கான முன்வினையாகவும் இக்காண்டத்தில் உணர்த்தப்பட்டுள்ளது.

'அசுர காண்டத்தில்' திருமால் படிமம் ஒன்றை அகத்திய முனிவர் சிவலிங்கமாக மாற்றியமைத்தமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர திருமால், பிரமன் முதலியோர் சிவனால் அடக்கியாளப்பட்ட செய்திகளும்தெரிவிக்கப்பட்டுள்ளன.

### பல்வகை சிறப்பு

சைவ வாழ்க்கைக்குரிய பொதுவான அறநிலை என்ற வகையில் ஆச்சிரமங்களில்

தொகுப்பு
ஐசண்

ஒன்றான இல்லறத்தின் இன்றியமையாச் சிறப்பு இந்நூலின் 'மார்க்கண்டேயப் படலத்தில் பேசப்படுகிறது.

நல்ல மனையாளுக்குரிய குணங்குறிகளும் விபரிக்கப்படுகின்றன.

இந்திரபுரிப் படலத்தில் ஆண் - பெண் உறவான சிற்றின்பக்கலை எடுத்துவிளக்கப்பட்டுள்ளது. காம சூத்திரத்தின் சுருக்கப்பதிப்பு என்ற வகையில் இது அமைந்துள்ளது.

'இரசவாதம்' பற்றிய கதை இந்தியப் பண்பாட்டின் வேதியல் தொடர்பானது. இவை தவிர அரசியல், போரியல், கட்டிடக்கலைமரபு முதலியனவும் தெரிவிக்கப்படுகின்றது.

'அண்டகோசப் படலத்திலே' அண்டங்கள் பலவற்றினதும் பரப்பு, இயல்பு என்பன பொதுவாகக் குறிப்பிடப்பட்டு, 'பரத கண்டத்தின்' பிரதேசப்பிரிவு ஆட்சி மரபுகள் என்பன விரிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு கந்தபுராணத்தின் சிறப்பு வேறெந்தப்புராணத்துக்கும் இருப்பதாகத் [illegible]வில்லை என வழங்கும் பழமொழி நினைவில் கொள்ளத்தக்கதே.

# ''பிறமத சேவையாளரின் கௌரவம் இந்துக் குருமாருக்கு இல்லை''

## பிரதம அர்ச்சகர் கவலை

(மட்டுவில்)

'மதம் மக்களால் பின்பற்றப்படுவது மட்டுமல்ல. மக்களால் போற்றப்படவேண்டும். இன்று இந்த நிலை, சைவசமய அர்ச்சகர்களுக்குக் கவலையளிக்கிறது. இலங்கையில் பிற மதங்களைச் சார்ந்த மத சேவையாளர்களுக்கு அளிக்கப்படும் கௌரவிப்புகளும்; சலுகைகளும் சைவசமயத்தவர்களுக்கு இல்லை.

இவ்வாறு சாவகச்சேரி, வெருக்கல் விநாயகர் ஆலய பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சி. கிருஷ்ணமூர்த்தி சர்மா கவலை தெரிவித்தார். இங்கு நடைபெற்ற ஓர் விசேட வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைப் போக்குவரத்து பஸ்ஸில் மதகுருமாருக்கு என ஓர் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இந்து மதகுருமாருக்கு இடமில்லை. இது ஒருபகுதியினரை ஒதுக்கிவைப்பதாகும்.

இ. போ. ச. பஸ்ஸில் இந்த நிலை இருந்தாலும் தனியார் பஸ்களிலும் இந்தப் பரிதாப நிலை இருக்கவேண்டுமா?

தனியார் பஸ்களாவது இந்துமத குருமாரை அடையாளங் கண்டு இந்தக் கௌரவத்தை அல்லது சலுகையைக் கொடுப்பதின் மூலம் சைவ சமயத்தைக் கௌரவித்ததாக அமையும் என்றார்.

## உணவு முத்திரைக்கு பலர் விண்ணப்பம்

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் வருமானம் குறைந்த பலர்புதிதாகஉணவு முத்திரை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

எழுநூறு ரூபாவுக்குட்பட்ட வருமானம் பெறுபவர்கள், புதிதாக உணவுமுத்திரைக்கு விண்ணப்பிக்கலாமென்ற அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானவர்கள் தமது பகுதி ஜனசக்தி உதவிக் குழுக்கள் மூலமாக விண்ணப்பித்துவிட்டுக் காத்திருக்கின்றனர்.

இதேபோல 55 வயதிற்கு மேற்பட்டஉழைக்கமுடியாத, வருமானம் குறைந்த பலர் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்றுத்தருமாறு மேற்படி குழுக்கள் மூலம் உதவிஅரசாங்கஅதிபர்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

## இடமாற்றம்

(மட்டுவில்)

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. பொ. பாலவடிவேல் யாழ் மாவட்ட நீதிபதியாக ஜூன் முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. இராமச்சந்திரன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகப் பொறுப்பேற்கிறார்.

## கிரிக்கெட்போட்டி: ஞாயிறு இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே ''ஜொலிஸ்டார்'' விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் ''ஷப்ரு'' வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். சென்.பற்றிக்ஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இவ் இறுதியாட்டத்தில் யாழ். சென்றலைட் [சொக்) கோஷ்டியை எதிர்த்து ஷப்ரு கோஷ்டி மோதும்.

மேற்படி இறுதியாட்டத்துக்கு யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளுவார். (வி)

## கொத்தணி: மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் மெய்வல்லுநர் போட்டி இன்று குருநகர் சென். ஜேம்ஸ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

## இலவச மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்]

யாழ். லயன்ஸ் கழகத்தினர் வறுமைக்கோட்டுக்குக் கீழ்வாழும் கண்பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை அடுத்தமாதம் நடுப்பகுதியில் வழங்கவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் சுமார் முன்னூறு இலவச மூக்குக்கண்ணாடிகளை லயன்ஸ் கழகத்தினர் வழங்கியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் - மினி வான் விபத்து

(வண்ணார்பண்ணை)

பாடசாலை சேவை மினி வான் ஒன்றுடன் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்வண்டி மோதியதில் வாகனங்கள் இரண்டும் சிறிது சேதமடைந்தன.

சுமார் 30 மாணவர்கள் எதுவிதகாயமுமின்றித் தப்பிக் கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்தின் முன்பாக நடந்த இந்த விபத்தினால் இருமணிநேரமாக போக்குவரத்திற்கு தடையேற்பட்டது.

## சமூகத் தொண்டர் விசுவலிங்கம்

ஈழத்தமிழர் துயர்துடைக்க முன்னின்று உழைத்துவந்த சமூகத்தொண்டரும், சைவப் பெரியாருமாகிய அமரர் விசுவலிங்கம் அவர்களின் சமூகப் பணிகளை, மூன்ருவது நினைவு தினமான இன்று நினைவுகூருவது மிகவும் பொருத்தமுடைமதாகும்.

1963ம் ஆண்டில் நடைமுறைதமிழ் இயக்கத் தலைவர் திரு. க. இளையதம்பி அவர்களும், சில பெரியார்களும் இணைந்துஉருவாக்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் மகத்தான பணிகளுக்கு ஐயா அவர்கள்இலைமறைகாய்போலிருந்து அரும்பெருந்தொண்டாற்றியவர். நாவலர் சிலை வைப்புவிழா, நாவலர் சிலை தேசிய பவனி. நல்லூரில்நாவலர் சிலை நாட்டு விழா, நாவலர் நூற்றுண்டுவிழாபோன்ற நாடளாவிய பெருவிழாக்களுக்கு பெரும் பங்கெடுத்து உழைத்தவர் சைவப்பெரியார் விசுவலிங்கம்.

சைவத்தமிழ் உலகிற்கு பயனுள்ள நாவலரின் நூல்களையும், அகத்தியர் தேவாரத் திரட்டு, சிவஞானசித்தியார் போன்ற பல நூல்களை நாவலர் சபையின் சார்பில் வெளியிட்டு சமய உணர்வுகளை வளர்த்துவந்தார்.

1977ல் இடம்பெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து காணமற்போன திரு. கந்தசாமி, தொழிற்சங்கவாதி அமரர் கே. சி. நித்தியானந்தன் ஆகியோரால் உருவாக்கப்பட்ட 'தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்துடன் ஆரம்பகாலம் தொட்டு உழைத்துவந்தவர்.

1981-ம்,1983ம்ஆண்டுகளில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் செயற்பட்டு வந்த அகதிகள்முகாம்களில் தொண்டளுகவிருந்து இரவுபகலாகப் பணியாற்றியவர்.

கொழும்பில் இயங்கிவந்த அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்திற்கு நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டபோது அந்த அமைப்பின் தலைமை அலுவலகத்தை யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்ததுடன் தமிழ்மண்ணில் இக்கழகத்தை வேரூன்றச் செய்த பெருமை இவருக்குண்டு. நிர்வாகத்திறமையினால் இதன் செயற்பாட்டை வலுப்படுத்தி அகதிகள் புனர்வாழ்வுப் பணிகளை விரிவுபடுத்தி உழைத்துவந்தார். இனக் கலவரங்களினாலும், வன்செயல்களினாலும் அகதிகளாக்கப்பட்ட இலட்சக்கணக்கான தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அயராது பாடுபட்டவர் விசுவலிங்கம் அவர்கள்.

பாதிக்கப்பட்டு வேலையை இழந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானதமிழ்ஊழியர்களின் நல்வாழ்வுக்கு உருவாக்கப்பட்ட ஊழியர்இணைப்புக்குழுவின் தலைவராக விருந்து ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து உதவினர்.

சைவப்பெரியார் விசுவலிங்கம் அவர்கள் தொடங்கிய சமய, சமூகப்பணிகள் சிறப்புற மிளிர்வதற்கு அன்னரின் தெய்வீகநெறியும் ஆத்மீகபலமுமே காரணம் என்ருல் மிகையாகாது.

—ஐ. தி. சம்பந்தன்

## கொத்தணி அதிபர்கள் கருத்தரங்கு

(சுன்னுகம்)

மருதனுமடம் கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள கொத்தணி அதிபர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தில் கோட்டக்கல்வி அதிகாரி திரு. ஆர். குலசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கோப்பாய் கல்வி வட்டாரத்தையும் மானிப்பாய் கல்விவட்டாரத்தையும் சேர்ந்தகொத்தணி அதிபர்கள் கலந்துகொண்டனர், கொத்தணி அதிபர்களின் நிர்வாகக்கடமைகள் பற்றி அக்கருத்தரங்கில் விளக்கிக்கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. சின்னத்தம்பி, கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி ஆகியோர் கொத்தணி அதிபர்களின் கடமைகள், பணிகள் பற்றி விளக்கமளித்தனர்.

ஏற்கனவே கொத்தணி அமைப்பின் கீழ் செயலாற்றி வந்துள்ள கோப்பாய் கல்வி வட்டார கொத்தணி அதிபர்களின் இதுகாலவரையான அனுபவங்களும் இக்கருத்தரங்கில்கலந்துரையாடப்பட்டன.

## பொது அமைப்புகளின் கூட்டம்

(சாவகச்சேரி)

கைதடி நுணுவில் கிராம மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடன் கைதடி நுணுவில் சனசமூக நிலையம் இப்பகுதியிலிருக்கும் பொது அமைப்புக்களின் கூட்டமொன்றை அடுத்த வாரம் நடத்தவுள்ளது.

இக்கூட்டத்தில் கைதடி, நுணுவில் கிராமத்தில் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் எவ்வாறு ஏற்படுத்கலாமென ஆலோசிக்கப்படவுள்ளதாக இந்த நிலையத்தின் தலைவர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

## மக்கள் பாராட்டு

(அரியாலை)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற திரு. கா. மாணிக்கவாசகரை யாழ். கொய்யாத் தோட்டமக்கள் கௌரவித்து பராட்டவுள்ளனர்.

கொய்யாத்தோட்ட சனசமூக நிலையத்தில் இம்மாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பாராட்டுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் கிராமசேவையாளர்கள், அரசஅலுவலர்கள், மற்றும் இப்பகுதி பிரமுகர்களும் பாராட்டுரை வழங்குவார்கள்.

# மதிய உணவுத்திட்டம்

## மாணவர்களின் வரவை அதிகரித்துவிட்டது

(பருத்தித்துறை)

''கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் பலர் போஷாக்கின்மையால் பல்வேறு பிரச்னைகளுக்குள்ளாகின்றனர். அம்மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஸ்தம்பித்து விடுகின்றன. இந்நிலையிலே பாடசாலைகளின் மதியபோசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மாணவர்களுக்குக் கிடைத்த அரிய வரப்பிரசாதமாகும்.''

இவ்வாறு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் மதியபோசனத் திட்ட அங்குரார்ப்பண விழாவிலே உரையாற்றிய வடமராட்சிக் கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. ஏ. வி. தங்கராஜா குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பங்குத்தந்தை அருட்திரு. ரீ. ஜெ. கிருபாகரன் அடிகளார், கல்வி அதிகாரி திரு. ஏ. வி. தங்கராஜா, பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. எஸ். திருச்செல்வம் ஆகியோர் மாணவிகளுக்கு மதிய உணவினை வழங்கி ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து உரையாற்றிய கல்வி அதிகாரி திரு. ஏ. வி. தங்கராஜா குறிப்பிட்டதாவது:

மாணவாகளுக்கு ஊட்டச்சத்துநிறைந்த மதியபோசனம் வழங்கப்படவேண்டும். வழங்கப்படும் உணவுவகைகள் ஊட்டச்சத்து நிதறந்தனவா என்பது கண்காணிக்கப்படவேண்டியது மிக முக்கியமாகும். மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதையடுத்து பாடசாலைகளில் மாணர்களின் வரவுகள் அதிகரித்திபது காணக்கூடியதாகவுள்ளது.

## இடமாற்றம்

(சாவகச்சேரி)

கடந்த ஆறுவருடங்களாக சாவகச்சேரி தபால் அலுவலகத்தின் அபதிராகக் கடமையாற்றிய திரு. சுப்பிரமணியம் கோடீஸ்வரன் இம்மாதம் 25ம் திகதி முதல் நெடுங்கேணி தபால் அலுவலகத்துக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

திரு. கோடீஸ்வரனின் இடத்துக்கு நிந்தாவூர் தபால் அலுவலகத்தில் பணிபுரிந்த தபால் அதிபர் திரு. எஸ். தியாகரர்சா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தபால் அலுவலகத்தின் புதிய அதிபர் தமது பொறுப்புகளை ஆற்ற ஆரம்பித்துள்ளார்.

## கவிதை தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வன்னி இலக்கிய கலாமன்றம் நடத்தும் வவுனியா தீலிபனின் ''எனது ராகங்கள்'' கவிதைத்தொகுதிவெளியீட்டு விழாவும், கலைவிழாவும் நாளை சனிக்கிழமை வவுனியா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா இலக்கிய கலாமன்றத்தலைவர் செல்வி ரீ. திசரேனுகா தலைமையில்நடைபெறும் இவ்விழாவில் சிறப்பு அதிதிகளாக கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் இந்து மாமன்றத் தலைவர் திரு. என். செல்லையா, முஸ்லிம் மகாவித்தியாலய ஆசிரியர் ஜனுப் அப்துல் சமட் ஆகியோர் கலந்துகொள்கிருர்கள்.

எஸ். தர்மகுலசிங்கம், எஸ். பூபாலசிங்கம் ஐ. சண்முகலிங்கம், ஆர். தயாபரன் ஆகியோர் நூல் மதிப்பீட்டு உரை நிகழ்த்நுவார்கள்.

''நிலவைத் தேடும் வானம்' என்னும் நாடகம், பரதநாட்டியம் என்பனவும் நடைபெறவுள்ளன.

## "பண்ணிசை ஞானம் பாடசாலைகளில் மறைகிறது"

(வண்ணார்பண்ணை)

''இறை வழிபாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் பண்ணிசை நம் நாட்டில் பரவ வகை செய்ய வேண்டும். நாயன்மார்கள் எமக்கு காட்டிய வழிகளை நாம் பின்பற்றத் தவறியதாலேயே நம் இளம் சமுதாயத்தில் இசை ஞானம், இறை வழிபாடு என்பன குன்றி வருகின்றன. இந்த நிலை மாற இலங்கையில் பரவலாக சங்கீதாச் சிரமங்கள் இயங்க வகை செய்யப்படவேண்டும். இதன் முன்னேடியாகவே இந்த சங்கீதாச் சிரமம் உருவாக்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் முதலாவது ஆச்சிரமமாகும்.''

சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சங்கீதாச் சிரமத்தில் ஆத்மஜோதி திரு. நா. முத்தையாவினது சமய சேவையை கௌரவிக்கும் வைபவத்தில் உரையாற்றிய மேற்படி ஆச்சிரம உப தலைவர் சங்கீத பூஷணம். பி. சந்திரசேகரம் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

திருவையாறு தியாகராஜ சுவாமிகள் சங்கீதாச் சிரமம் போன்று இலங்கையில் இந்த சங்கீதாச்சிரமமும் இயங்க எமது சேவைகள் விரிவடைய வேண்டும். பண்ணிசை ஞானம் கல்லூரிகளில் அற்றுப் போய்க் கொண்டிருப்பதையும். இதற்குப் பதிலாக சங்கிதம் என்ற போர்வையில் வேறு இசைகள் புகுத்தப்படுவதையும் நாம் காணமுடிகிறது. இதனால் இந்து சமயத்தவர்கள் இறை வழிபாட்டுக்குரிய இசை ஞானத்தை இழந்து வருவது கண்கூடு.'' என்றும் அவர் தெரிவித்தார்– சங்கீதாச் சிரமத்தின் தலைவராக ஈஸ்வர சுவாமிகள்) ஸ்ரீ வைத்தீஸ்வர அடிகள் அங்கிருந்து சேவையாற்றி வருகின்றூர்,

## நேர்முக பரீட்சைக் கடிதம் கிடைக்கவில்லை

[சுன்னுகம்]

உடற்பயிற்சி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுள் யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த பலருக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதான கடிதம் கிடைக்கவில்லை என அறியப்படுகிறது.

உடற்பயிற்சி ஆசிரியர்களாகச் சேர்ந்துகொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு கொழும்பில் புதன்கிழமை தொடக்கம் நேர்முகப் பரீட்சை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுப் போட்டி

(சாவகச்சேரி)

மீசாலைவடக்கு அறவழிப்பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி ஜூன் மாதம் 11ம் திகதி நடைபெறவுள்ளது.

## மயான இட ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

விளாவெளி இந்து மயானத்தில் இரண்டு வேதசபைகளுக்கு புதைகுழிக்காக சிறிதளவு நிலம் ஒதுக்குவது தொடர்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் வலிமேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத் திட்டத்திற்கு பலர் ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து எவ்வித முடிவும் எடுக்கமுடியாதநிலையில் முடிவடைந்தது.

வலிமேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளரும், வலிமேற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இப்பகுதியைச் சேர்ந்த கிராம முன்னேற்றசங்கங்கள், சனசமூகநிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மற்றும் மயான பார்வையாளர்களும், இருவேத சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்,

புதைகுழிக்கு சிறிதளவு இடம் வழங்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் இப்பகுதியில் இருவேத சபைகளுக்கென பிரேத அடக்கம் செய்யும் இடமெதுவும் இல்லாதிருப்பது குறித்தும் தங்களது கஷ்டநிலையை பெண்டிக்கோஸ் எனப்படும் வேத சபையையும் மற்றுமொரு வேதசபையையும் சேர்ந்த பிரதிநிதிகள் மிகவும் விநயமாக எடுத்துக் கூறினர்கள்.

இதற்கு கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் ஆதரவு தெரிவித்தபோதிலும் பெரும்பான்மையானவர்கள் ஆட்சேபம் தெரிவித்ததால் முடிவெதுவும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு கூட்டம் ... தார்.


## 31-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 17 / 08 / 59



இறப்பு: 03 / 05 / 89

காளிமுத்து ரத்தினவடிவேல் (கணேஷ்)

எத்தனை எத்தனை எண்ணங்கள்
ஏங்கித் தவிக்கும்
உள்ளங்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

அன்பு மனைவி, பிள்ளைகள், தாய்,
மச்சான்கள், மச்சாள்,
சகோதரர்கள், சகோதரிகள்,

189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் (கூனித்திவு).

சி-2788


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சம்மாந்துறை துயரங்கள்:

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''அண்மைக் காலமாக சம்மாந்துறையிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் தமிழ்-முஸ்லிம் சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கடந்த காலங்களில் கிழக்கு மாநிலத்தில் இரு சமூகத்தினரிடையே தோன்றி மறைந்த மோதல்களை நோக்குமிடத்து இது ஒரு சிலரின் திட்டமிட்ட பின்னணிபோல் சந்தேகிக்கத் தோன்றுகின்றது. சம்பந்தப்பட்ட இரு சமூகத்தினரும் புரிந்துணர்வின் அடிப்படையில் இம்மோதல்களைத் தவிர்த்து தமிழ்பேசும் மக்களின் ஒருமைப்பாட்டிற்காகச்செயற்படுவார்களென எதிர்பார்க்கின்றோம். இம்மோதல்களைத் தூண்டும் வகையில் செயல்படும் சந்தர்ப்பவாதிகளை இனங்காணுவதுடன் அவர்களின் நடவடிக்கைகளுக்குத் துணைபோகாது விழிப்புடன் செயற்படுமாறு வேண்டிக் கொள்கின்றோம்'' என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அறிக்கை மேலும் கூறுவதாவது:

''காலம் காலமாக ஒற்றுமையுடன் செயற்பட்டுவந்த தமிழ்பேசும் மக்கள் தம்மிடையே பிளவுண்டு மோதிக் கொள்வதால் தமிழ்பேசும்மக்களில் யாருமே நன்மையடையப்போவதில்லை. மாறாகத் தமிழ்ப்பிரதேசத்தில் நிரந்தர மோதல்களைத் தூண்டிவிட்டு சமூகங்களிடையே பகைமையையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்த விரும்பும் நாசகார சக்திகளேஇதனால்இலாபமடையமுடியும். எனவே சமூகங்களிற்குஇடையே ஏற்படும்முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாகக்கருதாமல், சமாதான பூர்வமான வழிகளில் தீர்த்துக் கொள்வதற்கான முன்முயற்சிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.இப்படிச்செய்வதன் மூலம் மட்டுமே இந்நிகழ்வுகளினால் இலாபமடைய முனையும் சக்திகளை நிர்மூலமாக்க முடியும்; நிர்மூலமாக்கவேண்டும்.''

# அமைச்சு அதிகாரிகள் நேற்று விஜயம்

(கொழும்பு)

புனர்வாழ்வுத்துறை அமைச்சின் குழுவினர் நேற்று சம்மாந்துறைக்கு விஜயம்செய்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொருட்டு வீடுகளுக்கும், சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதங்கள் பற்றி புள்ளி விபரங்களை இக் குழுவினர் சேகரித்தார்கள்.

இதேவேளை, இந்திய அமைதிப்படைத்தளபதி ஜெனரல் கல்கட் சம்மாந்துறைச்சம்பவம் தொடர்பாக இந்திய அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

ஜெனரல் கல்கட், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப்பேசினார்.

### மற்றுமொரு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காயங்களுடன் காணப்பட்ட ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

30 வயதான சி. கருணாகரன் என்பவரின் சடலமே யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (கு)

### பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

ஐந்து பாதுகாப்பு உத்தியோகத்தருக்கே வெற்றிடம் இருக்கின்றபோதிலும், ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

நேற்று நடந்த முதலாவது நேர்முகப் பரீட்சையில் மார்பளவு, உயரம், நிறை என்பன மட்டுமே பரீட்சிக்கப்பட்டது. இதில் தேறியவர்களே இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்று தெரியவருகிறது.

இதே வேளை இம் மாதம் 6ந் திகதி ஆரம்பமாகும் யாழ் பல்கலைக்கழகத் தொழிலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு சுமார் ஐநூறுபேர் தோற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ''சம்மாந்துறையில் இராணுவ முகாம் அமைக்க இலங்கைஅரசுமுயற்சிக்கு கண்டனம்''

(யாழ்ப்பாணம்)

''ஸ்ரீ லங்கா அரசானது சம்மாந்துறையில் புதிய இராணுவ முகாம் திறப்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் அவர்களது முகாம்களில் இருக்க முடியுமே தவிர, வெளியே சென்று செயல்பட முடியாது. ஆனால் ஸ்ரீலங்கா அரசானது ஒப்பந்தத்திற்கு முரணாக சம்மாந்துறையில் புதிய இராணுவ முகாம் அமைக்க முயற்சி செய்து வருகின்றது. சம்மாந்துறையில் ஏற்பட்டுள்ள இன மோதல்களுக்கான அடிப்படைக் காரணங்களையும்,அதுயாரால் மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் கண்டுபிடிக்காமல் அவசரப்பட்டு புதிய இராணுவ முகாம் அமைக்க முயற்சிப்பது நிலைமையை மேலும் சிக்கலாக்கவே வழிவகுக்கும்'' என்று ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''ஸ்ரீலங்கா அரசானது திட்டமிட்டமுறையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதி ஏற்படுவதற்கு முரணாகச் செயல்பட்டுவருகின்றது. ஆரம்பத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குரிய அதிகாரங்களைக் கொடுப்பதில்இழுபறிநிலையைத்தோற்றுவித்து இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கி வருகின்றது. சம்மாந்துறையில் ஏற்பட்ட தமிழ்-முஸ்லிம் கலவரத்திற்குப் பின்னணியில் ஸ்ரீலங்கா பொலிசாரும்செயல்பட்டார்கள் என்பதை எம்மால் நிரூபிக்கமுடியும்.எனவே இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கி அதனைக் காரணமாகக் காட்டி புதிய இராணுவ முகாம்கள் திறப்பதை எம்மால் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.''

### யாழ். பல்கலைக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் திரு. ஆர். சிவயோகநாதன், இணைச்செயலாளர் திரு. கே. சி. எட்வேட் ராஜ் ஆகிய இருவரும் பல்கலைக்கழகங்களின் சம்மேளத்தவர்களைச் சந்தித்து பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் பொதுக்கூட்டம், வேலைநிறுத்தம் தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காக நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும் பல்கலைக்கழக மானியக் குழுவுக்கும் ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக மிகவும் நெருக்கமான முறையில் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குறுகிய கால பயிற்சி வகுப்பு

(சாவகச்சேரி)

உளவளத் துணையாளர்களுக்கான குறுகியகாலப் பயிற்சி வகுப்பு ஒன்றினை 'சாந்திகம்' உளவளத் துணை நிலையம் நாளை 3ம்திகதிமுதல் தொடர்பகத்தில் நடாத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் 25 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என 'சாந்திகம்' பிரமுகர் தெரிவித்தார்.

### நீர்வேலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷ்ர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக்காலை பத்து மணி வரையும் பருத்தித்துறை நீர்வேலி வீதியூடாக போக்குவரத்துச் சேவைகளும் இடம் பெறவில்லை.

### பருத்தித்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இத் தாக்குதலினால் மின்சார வீதியிலுள்ள வீடொன்றில் விளையாடிக்கொண்டிருந்த யோகேஸ்வரன் கரிதரன் (வயது 14) என்னும் சிறுவன் படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அதே வீதியைச் சேர்ந்த மாணிக்கம் யோகேந்திரன் (வயது 36) என்பவர் காலைக்கடனைக் கழிக்கச் சென்றவேளையில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஓடைக் கரையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையே இச்சம்பவத்தில் பலியானவராவார்.

இதே வேளையில் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் நின்ற இரண்டு பஸ்கள் இளைஞர் கோஷ்டி ஒன்றினால் தீவைத்து எரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இரு பஸ்களும் முற்றாக எரிந்து சாம்பராகின. இந்த இரு 'டாட்டா' இன பஸ்களும் இந்திய அரசாங்கத்தினால் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவையாகும். (கு)

# கடற்றொழில் அபிவிருத்திக்கு ஆசியஅபிவிருத்திவங்கிஉதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்டங்களில் கடற்றொழில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கவுள்ளது.

1987-ல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தூதுக்குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து கடற்றொழில் நடவடிக்கைகளைப் பார்வையிட்டுச் சென்றதைத் தொடர்ந்து இங்குள்ள நிலைமை தொடர்பான அறிக்கையொன்றைக் குழுவினர் சமர்ப்பித்தனர்.

மேற்படி குழுவினரின் சிபார்சின் பேரிலேயே ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்கவுள்ளதாகக் கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### வடக்கு கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கும் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா 22 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை வழங்கவுள்ளது.

ஐரோப்பிய பொருளாதார சமூகம் விவசாய அபிவிருத்திக்கெனவும், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நிதி உதவிகள் வழங்கவுள்ளன.

இவற்றுடன் மத்திய புனர்வாழ்வு அமைச்சு, ஒரு கோடியே அறுபத்தைந்து லட்சம் ரூபா உதவியை இம் மாகாணங்களுக்கு வழங்கவுள்ளது.

## நீர்வேலியில் போக்குவரத்து தடை

(கொழும்புத்துறை)

நீர்வேலியில் நேற்றுக் காலை10மணிவரையும் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. பத்து மணிக்குப் பின்னரே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

### சிரேஷ்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருமான திரு. லெஸ்லி ரணவல நேற்றுக்காலை சுடப்பட்டு மரணமானார்.

திடீர் குண்டுத் தாக்குதல் மத்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

### வடமராட்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றன.

இதேவேளையில் நேற்று அதிகாலை 6 மணி முதல் பகல் சுமார் 2 மணி வரை பருத்தித்துறையின் சகல பகுதிகளிலும் தொடர்ச்சியாகக் குண்டுச் சத்தங்கள் கேட்டபடியே இருந்தன.

இதனால் இப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பு நிலவியது. மக்கள் அல்லோலகல்லோலப் பட்டனர்.

[illegible]

(பருத்தி-கொது-திரு.)

## மாணவனுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''சம்மாந்துறையில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது அகால மரணமடைந்த எமது சக மாணவன் எஸ். எச். எம். பாரீட்டுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம். தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக ஏற்படும் மோதல்களிடையே மாணவ சமுதாயமும் அகப்பட்டுக்கொள்வது கவலைக்குரியது. தமிழ்ப் பேசும் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டிய நேரத்தில் மாணவர்களை அரசியல் பகடைக்காய்களாகப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகும்'' என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### நாவாந்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் விஜயகுமார் (42 வயது) என்றும், திருநெல்வேலியில் காணப்பட்ட சடலங்கள் நாகரட்ணம் ஆனந்தராசா (17 வயது. திருநெல்வேலி), கந்தசாமி கஜேந்திரன் [17 வயது] ஏழாலை ஆகியோரினதும் என்றும் அடையாளம் காணப்பட்டது.

### அமைதிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளை விடுத்தார்.

அமைதிப் படையினரை அடுத்த மாதத்திற்குள் வாபஸ் பெறுவதுகுறித்து அடுத்த சில தினங்களில் தாம் இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியுடன் விரிவான முறையில் பேச்சு நடத்த உள்ளதாகவும் ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

இந்தியப் படைகளை இங்கிருந்து திருப்பி அழைக்கும் நடவடிக்கைகளுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடக்கூடாது என்றும் ஜனாதிபதி பொதுமக்களுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

''நாம்கேட்டுக்கொள்வதற்கு முன்னரே இந்தியா தமதுபடைகளை வாபஸ் பெறத் தொடங்கியது. படைகளை துரிதமாகத் திருப்பி அழைப்பது இப்போது அவசியமாகும்'' என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எமக்கிடையே இருந்த கருத்துவேறுபாடு காரணமாகவே இந்தியத் துருப்புக்கள் இங்கு வந்தன. எமக்கிடையேயான பிரச்னைகளை நாம் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்து வைக்கவேண்டும். இன்றையசந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தத்தவறினால் தேசத்துரோகியாகவே கணிக்கப்படுவோம் என்றும் ஜனாதிபதி கூறினார்.

அடுத்த மாதத்துடன் இந்தியப்படைகள் இலங்கைக்கு வந்து 2 வருடங்கள் பூர்த்தியாவது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sr iLanka under number B/10036/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org